## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984, பிப்ரவரி 24, வெள்ளிக்கிழமை.

மாசி 12, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு."

உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க அதை விட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது,.

### 1. இரங்கல் தீர்மானம்.

பேரவை உறுப்பினர் திரு. சு. நடராசன் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப பேரவையின் உறுப்பினரான திரு. சு. நடராசன் அவர்கள் நேற்றைய தினம் 23—2—1984 பிற்பகல் 2-50 மணிக்கு மறைந்து விட்டார்கள் என்ற செய்தியை மிகுந்த வருத்தத்தோடு அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இரங்கல் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" திரு. சு. நடராசன் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையும், 1977 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1980 ஆம் ஆண்டு தற்போதைய சட்டமன்றத்துலிருக்கும் தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தொகுதியிலிருந்து மூன்றுமுறை தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அவர் இனிய பண்பும், உள்ளமும், செயல் திறனும் கொண்டவர். அன்னார் 23—2—1984 ஆம் தேதியன்று மறைந்ததை குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது."

மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. நடராசன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்து எல்லோருடைய அன்பையும், அரவணைப்பையும் பெற்று, எல்லோருடைய பாராட்டுதல்களையும் பெறத்தக்க அளவிற்கு நல்ல பண்பிற்கு உறைவிடமாக விளங்கியவர்கள் ஆவார்கள். அவருடைய மறைவு மன்றத்திலே உள்ள அத்தனை பேருக்கும் பெரும் அதிர்ச்சியை தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. திடீரென்று மாரடைப்பின் காரணமாக அவர்கள் மறைந்தார்கள் என்ற செய்தி நேற்று மாலை எட்டுகிறபோது எல்லோரும் துக்கமும், துயரமும் அடைகிற ஒரு நிலையை உருவாக்கியுள்ளது. திரு. நடராசன் அவர்களை நான் 30 ஆண்டு காலமாக மிக நன்றாக அறிவேன். அவர் கொள்கைப் பிடிப்பிலே மிகச் சிறப்பாக இருந்தது மட்டுமல்லாமல் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களிடத்திலும், பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலும் நீங்கா பற்றும் தணியா ஆர்வமும் கொண்டு கொள்கையை பரப்புவதிலும், கொள்கையை நிலை நாட்டுவதிலும் மிகத் துடிப்போடு இருந்த இனிய பண்பாளர் ஆவார்கள். நீண்டகாலமாக தன்னை அரசியலுக்கு ஒப்படைத்து பொது வாழ்க்கையிலே ஈடுபட்டு, எல்லோருடைய மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்று எல்லோராலும் அரவணைக்கப்படுகிற அளவிற்கும், அன்பு செலுத்தப்படுகிற அளவிற்கும் சிறந்த நிலையைப் பெற்றவர்கள் ஆவார்கள். அவர்கள் பொது வாழ்க்கையில் பல்வேறு துறைகளில் பங்குகொண்டு பணியாற்றி வந்ததிலிருந்து தஞ்சை மாநகரத்தின் பொது மக்கள் அவரிடத்திலே எவ்வளவு நம்பிக்கையும், மதிப்பையும், வைத்து பல பொறுப்புகளை அவரிடத்தில் ஒப்படைத்து அவருடைய பொது வாழ்க்கைத் தொண்டைப் பயன்படுத்தி வந்தார்கள் என்பதை நாம் நன்கு அறியலாம். அவர்கள் தஞ்சை நகராட்சி மன்ற உறுப்பினராக 1964 ஆம் ஆண்டிலிருந்து 1969 ஆம் ஆண்டு வரை பணியாற்றி வந்து அந்த நகர மக்களுடைய நல்ல பராட்டுதல்களைப் பெற்றவர்கள் ஆவார்கள். அது மட்டுமல்லாமல் தஞ்சை நகர கூட்டுறவு வங்கியினுடைய தலைவராகவும் அவர் பணியாற்றி சிறப்பான புகழையும், பெருமையையும் பெற்றார்கள். தஞ்சை மாவட்ட பூப்பந்து சங்கத்திலே 12 ஆண்டுகள் தலைவராகவும் விளங்கி வந்தார்கள். அது மட்டுமல்லாமல் தஞ்சையிலே நீண்டபெரும் காலமாக கறந்தைப் பகுதியிலே நின்று நிலவி வருகிற தமிழ்ச்சங்கம் தமிழ் அறிஞர் உமா மகேஸ்வரன் அவர்களால் நிறுவப் பெற்று, மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிற அந்தத் தமிழ்ச் சங்கத்தில் தலைவராக இருந்து பணியாற்றி இருக்கிறார்கள். தஞ்சாவூர் காவிரி சிறப்பு அங்காடியின் தலைவராக 5 ஆண்டு காலம் இருந்து பணியாற்றியிருக்கிறார்கள். தமிழக சட்டமன்றத்திற்கு மூன்று முறை தஞ்சை நகரத் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வந்து அமர்ந்து பணியாற்றியிருக்கிறார்கள். இனிய பண்பும், பழகுவதற்கு ஏற்ற நல்ல சுபாவமும், எல்லோருடைய அன்பையும் கவரத்தக்க அளவிற்கு சிறந்த பண்பைப் பெற்றவர்

ஆவார். எந்த ஒரு பொறுப்பை அவரிடத்தில் ஒப்படைத்தாலும் ஆரவாரத்திற்கு இடம் இல்லாமல், படோடாபத்திற்கு இடம் இல்லாமல், பகட்டுக்கு இடம் இல்லாமல் மிக ஊக்கத்தோடு பணியாற்றியவர்.

இப்படிப்பட்ட இனிய சிறப்பான பண்புகளைக் கொண்ட அருமை நண்பர் நடராஜன் அவர்கள் தமது 60-வது ஆண்டு நிறைவு எய்துகிற நேரத்தில் இயற்கை எய்தியது எல்லோருக்கும் தாங்கொணா துக்கத்தையும், துயரத்தையும் அளிக்கக்கூடிய தாகும். எனவே, அவரைப் பிரிந்து வருந்துகின்ற அவருடைய குடும்பத்தாருக்கும், அவரைப் பிரிந்து வருந்துகின்ற நண்பர் களுக்கும் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்களுடைய தொகுதி வாழ் மக்களுக்கும் இந்தப் பேரவை தனது இரங்கலையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது என்ற தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சைத் தொகுதியின் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. நடராசன் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானத்தை மாண்புமிகு முன்னவர் அவர்கள் முன்மொழிந்து பேசிய கருத்துக்களோடு இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் வழி மொழிந்து என் கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்

கடந்த 3— ஆண்டுகாலத்திற்கு மேலாக இந்த மாமன்றத்திலே பணிபுரிந்து ஒரு நல்ல சகாவை நாம் நேற்று மாலையில் இருந்து இழந்து இருக்கிறோம். அவை முன்னவர் அவர்கள் சொன்ன தைப்போல 1972 ஆம் ஆண்டிலே இருந்து மூன்று முறை தஞ்சை தொகுதியில் இருந்து அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என் றால், தஞ்சை தொகுதி மக்களுக்கு அவர் அந்த அளவிற்கு சேவை செய்து இருக்கிறார் என்பதையும், அந்தத் தொகுதி மக்கள் மீது அவர் எந்த அளவிற்குப் பாசமும் பற்றும் அக்கறையும் வைத்து இருந்தார் என்பதையும் நம்மாலே உணரமுடிகிறது.

மறைந்த திரு. நடராசன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையிலே நல்ல பிடிப்பு உள்ளவர்கள். பல் லாண்டுகாலம் வாழ்ந்து இருந்து, அந்தக் கட்சியின் சார்பில் நடைபெற்ற பல்வேறு போராட்டங்களில் பங்கு பெற்றவர். 7 முறைக்கு மேலே சிறைக்கூடம் எய்தி இருக்கிறார் என்ற தகவல் நமக்குக் கிடைத்து இருக்கிறது. கட்சிக்கு அப்பாற்பட்ட பணி களிலும், கூட்டுறவு சங்கங்கள், மற்றும் நகராட்சி மன்றத்திலும் உறுப்பினராக இருந்து பணியாற்றியவர். இன்னும் சொல்லப் போனால் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக பொறுப் பேற்றுப் பணியாற்றியவர் என்று தகவல் வந்து இருக்கிறது. கடந்த மாதம் 23 ஆம் தேதி அவருடைய மகன் திருமணத்தை

முடித்தவர் இந்த மாதம் 23 ஆம் தேதி இயற்கை எய்தியிருக்கிறார் என்று சொன்னால் எவ்வளவு பெரிய ஆற்றொணாத் துயரத்தை அவர்களது குடும்பத்தினர் அடைந்திருப்பார்கள் என்பதை நம்மால் உணர முடிகிறது. ஒரு நல்ல பண்பாளரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தாருக்கும், தஞ்சைத் தொகுதி மக்களுக்கும் இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் தலைவரவர்களே, சட்டமன்றத்தில் நீண்டகாலமாக என்னுடைய பக்கத்திலே அமர்ந்திருந்த சட்டமன்ற உறுப்பினர் தஞ்சை நடராசன் அவர்கள் நம்மையெல்லாம் துயரத்திலே ஆழ்த்திவிட்டு இன்றைக்கு இயற்கை எய்தியிருக்கிறார்கள். கடந்த 3 ஆம் தேதி தஞ்சையிலே அண்ணாவிற்கு நினைவு அஞ்சலி செலுத்துகின்ற ஊர்வலத்தில் கலந்துகொண்டார் ; என்னையும் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். நானும் அதிலே கலந்துகொண்டேன். அந்த ஊர்வலம் முடிந்ததும், இறுதியில் என்னைப் பார்த்து போய்விட்டு வருகிறேன் என்று விடைபெற்றுக்கொண்டார், இன்று நிரந்தரமாக நம்மைவிட்டு பிரிந்து சென்றிருக்கிறார்கள். அரசியல் கருத்து வேறுபாட்டுக்கு யாரிடத்திலும் அவர் பகைமை பாராட்டியதில்லை. அனைவருடனும் தனிப்பட்ட முறையில் அன்போடு பழகி, அரசியல் நாகரீகத்தின் இலக்கணமாகத் திகழ்ந்தார் மறைந்திருக்கும் நடராசன் அவர்கள்.

(முற்பகல் 9–10)

தஞ்சை நகரில் அரசியல் வட்டாரத்தில் மட்டுமல்ல, எல்லாத் தரப்பு மக்களாலும் நேசிக்கப்பட்டவர். 1971-லிருந்து தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். தஞ்சை நகராட்சி உறுப்பினராகவும், கூட்டுறவு வங்கித் தலைவராகவும், கரந்தை தமிழ்ச் சங்கத் தலைவராகவும் இருந்து எல்லாத் துறைகளிலேயும சிறப்பாகப் பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1949இல் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்குவதற்கு முன்பாகவே திராவிடர் கழகத்திலே தன்னை இணைத்துக்கொண்டு ஐயா அவர்களுடன் இணைந்து நீண்டகாலம் பணியாற்றியவர். அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கியபோது தஞ்சை தரணியில் கழகத்திற்கு எதிர்ப்பு அதிகமாக இருந்தபோதிலும்கூட அங்கே கழகம் வேரூன்றி, திராவிட இயக்கம் வளர அரும்பாடு பட்டவர். இன்றைக்கு ஆளும் கட்சியில் இருக்கக்கூடிய அமைச்சர் காளிமுத்து போன்றவர்களும், இன்னும் பலரும் அதைப்போன்று திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற பலரும் கல்லூரி

1984 பிப்ரவரி 24] (திரு. அ. ரகுமான்கான்)

களிலே படித்துக்கொண்டிருந்த காலத்தில் எங்களைப்போன்றவர்களை எல்லாம் அழைத்து கூட்டங்கள் போட்டு, இளைஞர்கள் அரசியலில் வருவதை வரவேற்று, ஊக்கப்படுத்தி, என்னைப் போன்ற இளைஞர்களுக்கு உற்சாகத்தை ஊட்டியவர் இன்றைக்கு நம்மைவிட்டு பிரிந்துவிட்டார்.

பல்வேறு அரசியல் போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றத் தியாக தீபமாக இருந்தவர் திரு. நடராசன் அவர்கள். உடல்நலம் இல்லாத போதிலும், கடந்த சில ஆண்டுகளாக இருதய நோய் ஏற்பட்டு, இருதய வலியின் காரணமாக 2, 3 முறை படுக்கையில் இருந்துகொண்டு ஓய்வு எடுத்துக்கொள்கிற அந்தச் சூழ்நிலையில்கூட அவர் பொதுச்சேவைகளில் அக்கறை காட்டியவர்.

அருமை நண்பர் தஞ்சை நடராசன் அவர்கள் எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பல முக்கிய பொறுப்புகளில் இருந்தவர். 25 வருடங்கள் தஞ்சை கழகச் செயலாளராக இருந்தவர். இந்த சட்டமன்றத்தில் ஒரு நல்ல சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். இன்றைய தினம் அவர் நம்மைவிட்டு பிரிந்து விட்டார். அன்னாருக்கு அனைத்துக் கட்சிகளின் சார்பில் தெரிவிக்கப்படுகிற இந்த இறுதி அஞ்சலியில் நானும் எங்களுடைய கட்சியின் சார்பாக இறுதி அஞ்சல் செலுத்துகிறேன்.

தஞ்சை நகரில் பிரகதீஸ்வரர் ஆலயம் எவ்வளவு சிறப்பானதோ அந்த அளவுக்கு, அதைப்போன்று திராவிடமுன்னேற்றக் கழக வரலாற்றிலே தஞ்சையிலே ஒரு பிரகதீஸ்வரர் ஆலயமாக இருந்தவர். இன்றைக்கு அந்த இயக்கத்தின் கோபுரம் சாய்ந்திருக்கிறது. அண்ணாரின் பிரிவால் வருந்தி வாடுகின்ற குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் என்னுடைய கண்ணீரைக் காணிக்கையாக்கி, இந்த இரங்கல் தீர்மானத்திலே நானும் கலந்துகொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மறைந்த திரு. நடராசன் அவர்களுடைய மறைவு குறித்து அவை முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இரங்கல் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வழிமொழிந்து என்னுடைய அனுதாப கருத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் மறைந்த திரு. நடராசன் அவர்கள் எளிய குணமும் அடக்கமும் கொண்டு திகழ்ந்தவர். திராவிட முன்னேற்றக் கழகத்திலே

நீண்டகாலம் பணியாற்றிய அவர் அரசியலில் மட்டுமல்லாமல் திரு. உமாமகேசுவரன் அவர்களால் நடத்தப்பட்ட கரந்தை தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியிலேயும் முக்கிய பங்கேற்று, தஞ்சை நகரசபை, கூட்டுறவு வங்கி, விளையாட்டுத்துறை போன்றவை களிலும் பங்குகொண்டு நல்ல முறையில் பணியாற்றிக் யிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது அவர் பலமுப்பட்ட பொது ஜன சேவையில் ஈடுபட்டவர் என்பது நமக்கு புலனாகிறது.

அவர் மூன்று முறை தஞ்சை தொகுதியிலிருந்து இந்த சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்ற அந்த செய் தியே அவர் தஞ்சை மக்கள் மத்தியில் எவ்வளவு ஆழமான தொடர்பு கொண்டு, அவர்களுக்குப் பணிபுரிந்தார் என்ற உண் மையை நமக்கு விளக்கும். அவர் கடந்த பல ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டு, இருதய நோயால் திடீரென்று மறைவு எய்தி னார். அதனால் அவருடைய குடும்பத்திற்கு பேரிழப்பு ஏற் பட்டிருக்கிறது. அவருடைய மறைவினால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய துன்பம் அடைந்திருக்கக்கூடிய அவருடைய குடும்பத்தின ருக்கும், அவருடைய தொகுதி மக்களுக்கும் அவரை இழந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி வித்து, இந்த இரங்கல் தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, அவை முன்ன வர் கொண்டு வந்திருக்கிற, திரு. நடராசன் அவர்களுடைய மறைவு குறித்த, இரங்கல் தீர்மானத்தை எங்களுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வழிமொழிந்து ஒரு சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய திரு. நடராசன் அவர்கள் தொடர்ந்து பல பொது சேவைகளில் ஈடுபட்டு, சிறப்பான முறையில் பணியாற்றிய இனிய நண்பர். அவரைப் பற்றி சொல்லும்போது, அவருடைய நண்பர் கள் என்னுடைய தொகுதி கோவில்பட்டியிலே பல பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சொல்லுவார்கள்—நடராசன் அவர் கள் அனைத்துக் கட்சி மக்களாலும், அன்பாக நேசிக்கப்படக் கூடிய ஒரு சிறந்த சேவை செய்யக்கூடிய ஒரு பண்புள்ள மனிதர் என்று சொல்வார்கள். ஏற்கெனவே, கூட்டுறவு செலக்ட் கமிட்டி யிலே, அதாவது நம்முடைய பொறுப்புக் குழுவிலே அவரும்; நானும் ஒன்றாகத் தொடர்ந்து பணி ஆற்றிய காலத்தில் கூட் டுறவு சம்பந்தமாக ஒரு சிறந்த நல்ல அனுபவத்தைப் பெற்று பணியாற்றிய காலத்தில் அவர் எப்படி சிறப்பாக பணியாற்றி னார் என்று நான் தெரிந்துகொள்ள முடிந்தது.

அதுமட்டுமல்ல, ஒரே தொகுதியில் தொடர்ந்து மூன்று முறை யும் நல்ல முறையில் வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்றால், சகல வித மக்களாலும் அவர் எவ்வித வேறுபாடும் இல்லாமல், எந்தக்

1984 பிப்ரவரி 24] (திரு. சோ. அழகர்சாமி)

கட்சியைச் சார்ந்தவர்கள் போனாலும், அவருடைய கோரிக்கையை ஏற்று, நல்ல முறையில் அன்பாகப் பேசி செய்துமுடிக்கக் கூடியவர் என்று சொல்லக்கூடிய அளவற்கு இருந்திருக்கிறார். அப்பேற்பட்ட ஒரு பண்பாளர்.

அதுமட்டுமல்ல. கூட்டுறவு மத்திய வங்கியிலே அவர் தலைவராக இருந்திருக்கிறார்கள். பொது சேவைகளில் ஈடுபட்ட காலத்தில், சிறப்பாக பணியாற்றி இருக்கிறார்கள். அவருடைய மறைவு அந்த வட்டாரத்திலுள்ள மக்களுக்கு ஒரு ஈடு செய்ய முடியாத ஒரு இழப்பாகும். அவரை இழந்து துயருற்றிருக்கின்ற அன்னாருடைய குடும்பத்தாருக்கும், அவர் சார்ந்திருந்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும், அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. தனுக்கோடித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக வழிமொழிந்து, மறைந்த நடராஜன் அவர்களுடைய குடும்பத்தாருக்கு அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து, அமர்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் நடராஜன் அவர்களுடைய மறைவு குறித்து ஜனதா கட்சியின் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் நடராஜன் அவர்களின் இனிய குணத்திற்கும், நல்ல பண்புகளுக்கும் சொந்தக்காரர் என்று சொல்லக் கூடியவர். நடராஜன் அவர்கள் 1960-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அந்த மாவட்டத்தினுடைய திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளராகப் பணியாற்றியிருக்கிறார்கள் 1971-ஆம் ஆண்டிலிருந்து மூன்று முறை இந்த சட்ட மன்றத்திற்கு, ஒரே தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் என்றால், இதிலிருந்து அவர்கள் மக்கள் மத்தியில் எந்த அளவிற்கு அன்பையும், மரியாதையையும் பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது கட்சியின் ஆணையை ஏற்று நடராசன் பல போராட்டங்களில் தலைமையேற்று, சிறை புகுந்திருக்கிறார்கள். விலைவாசி போராட்டத்தில் பங்கேற்று, சிறை சென்றிருக்கிறார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அவர் பங்கேற்றிருக்கிறார்கள். எமர்ஜன்சி ஆட்சியின்போது மீசா சட்டம்கூட அவரை விட்டு வைக்கவில்லை. கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்திருக்கிறார். இத்தனை

துன்பங்களும், தொல்லைகளும் ஏற்பட்டபோதும்கூட, தன்னுடைய கொள்கையிலிருந்து மாறிவிடாமல், கொள்கைச் செறிவோடு, தன்னுடைய வாழ்நாள் கடைசிவரையில் உழைத்திருக்கிறார்கள். இது அவருடைய சிறந்த குணங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. அத்தகைய நண்பரை இழந்து தவிக்கும் மாவட்ட மக்களுக்கும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும், அவருடைய இழப்பால் வேதனையுற்றிருக்கின்ற அன்னாருடைய குடும்பத்தாருக்கும், ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அருமை நண்பர் நடராசன் அவர்கள் மறைவிற்காக, அவ்வ முன்னவர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்திலே எளிய தொண்டனாக நடராசன் அவர்கள் அரசியல் வாழ்வைத் தொடங்கி 25 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து அந்த இயக்கத்தோடு இரண்டறக் கலந்து நின்று, அளப்பரிய தொண்டினை அவர் செய்திருக்கிறார்.

அரசியலில் மட்டுமல்லாமல், தொழிற்சங்கத்திலே, கூட்டுறவுச் துறையிலே, தமிழ் சங்கப் பணியிலே என்று அவருடைய தொண்டு வெவ்வேறு துறைகளிலே விரிந்தும் பரந்தும் இருந்திருக்கிறது. அவர் சிறந்த தொண்டர் என்பது மட்டுமல்லாமல், அந்தப் பகுதி மக்களாலே எந்த அளவிற்கு நேசிக்கப்பட்டார் என்பதற்கு மூன்று முறை அவர் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அத்தகைய ஒரு சிறந்த தொண்டரை திராவிட முன்னேற்றக் கழகம் இழந்திருக்கிறது. ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினரை நாம் இழந்திருக்கிறோம். அவர் சார்ந்த கட்சியினருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும், என்னுடைய கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்

(முற்பகம் 9—20.)

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மா மன்றத்தின் உறுப்பினராக இருந்த தஞ்சை நடராசன் அவர்கள் இயற்கை எய்தியது நாம் யாரும் எதிர்பார்க்காத ஒன்று. மூன்று முறை அவர்கள் மீண்டும் மீண்டும் தேர்தலில் வெற்றி பெற்றுவந்தார்கள் என்றால், அது மக்கள் அவர்களுக்கு அளித்த ஆதரவு என்பது மட்டுமல்ல, அவர்களுடைய அனுபவம் சட்டமன்றத்திற்கு எவ்வளவு பயன்பட்டு இருக்கிறது என்பதையும், அது தொடர்ந்து பயன்பட வழியில்லாமல்

இருக்கிறது என்பதையும் நினைக்கும்போது, இந்த மன்றத்தில் அனுபவம் மிக்க, திறமை மிக்க, கொள்கைப்பற்று மிக்க ஒருவர் இல்லாது போய்விட்டார்! என்ற வேதனையை, ஏமாற்றத்தை நம் அனைவரும் பெறுகிறோம்.

எனக்கும் அவருக்கும் பல ஆண்டுகள் தொடர்பு இருந்தது என்பது இந்த நாடு அறிந்த உண்மை. அவர் இனிமையாக எல்லோரோடும் பழகக்கூடியவர் என்றாலும், நல்லவர்கள் யார்? கெட்டவர்கள் யார் என்று பார்த்து, சீர்தூக்கி, அவர்களைப் பற்றி உண்மை அறிந்து அவர்களையும் திருத்த முற்படும் அளவிற்கு அவர் சாமர்த்தியசாலியாக, பண்புள்ளவராக இருந்தார். நெகிழ்ந்த மனம் உடையவர். ஆனால் உறுதியான கொள்கைப் பற்று மிக்கவர்.

அதுமட்டுமல்லாமல், அண்ணா அவர்கள் சொன்னதைப் போல தனி மனிதன், குடும்பம் என்றால் குடும்பம் பெரிது; குடும்பம், கட்சி என்றால் கட்சி பெரிது; கட்சி நாடு என்று பார்த்தால் நாடு பெரிது என்ற கொள்கையில் அவர் கொஞ்சம்கூட விட்டுக் கொடுக்காமல், இறுதி வரை தன்னுடைய கடமையை ஆற்றினார்கள். அவரை இழந்து இருக்கின்ற, அவருடைய குடும்பத்தினருக்கு எவ்வளவுதான் நாம் ஆறுதல் சொன்னாலும், அது அவர்களுடைய கண்ணீரை ஓரளவிற்குத் துடைக்க உதவுமே தவிர, அவர்கள் ஏமாற்றத்திற்குரியதாக இருக்குமே தவிர, அவர்கள் மன நிறைவு பெற முடியாது. அப்படிப்பட்டவர்களை அவர்கள் இழந்திருக்கிறார்கள்: நாமும் இழந்திருக்கிறோம் நாமும் கண்ணீரைத் துடைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் கண்ணீரும் துடைக்கப்பட வேண்டும். அந்த வகையிலேதான் நாம் தேறுதலும் ஆறுதலும் சொல்லி, இந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரிக்கிறோம்.

இன்னொன்றையும் இங்கே மிகவும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், நோய் வாய்ப்பட்டிருந்த காலத்திலும் அவர் தம் கட்சிக் கொள்கையை, கட்சிக் கடமையை அவர் விட்டவர் அல்ல. நோயைப் பற்றிக்கூட, தன் உயிரைப்பற்றிக் கூட, கவலைப்படாமல் அவர் உழைத்தவர் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அந்த தியாக மரபு மிக்க அந்தநல்ல நாட்டுப் பற்றுக்கொண்ட தொண்டரை இந்த மன்றம் மட்டுமல்ல, நாடே இழந்திருக்கிறது என்பதை நான் குறிப்பிடக் கடமைப் பட்டவன். அப்படிப்பட்ட அவருடைய மறைவுக்காக நாம் இரங்கலை இங்கே தெரிவிக்கும்போது, அவரைச் சார்ந்து இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், அவருடைய நெருங்கிய உறவினர்களுக்கும் நம்முடைய கண்ணீரை அவர்களுடைய கண்ணீ

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ரோடு கலந்து அவர்கள் ஆறுதல் பெறவேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்து, ஆறுதல் கூறுகின்ற இந்த தீர்மானத்தை நானும் வழிமொழிகின்றேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு என்னுடைய கருத்தையும் நான் இணைத்துக்கொள்கிறேன். திரு நடராசன் அவர்களை நான் பல்லாண்டுக்காலமாக நன்றாக அறிவேன். அன்போடும், பண்போடும் பாசத்தோடும் பழகிய ஒரு நல்லவரை இன்றைக்கு நான் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் சட்டமன்றத்திலே 15 ஆண்டுக்காலம் டணியாற்றி இருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் எல்லாத் தரப்பினர்கள் இடத்திலேயும் மதிப்பும் மரியாதையும் பெற்றவராக வாழ்ந்து வந்தார்கள், என்பதை நான் நன்றாக அறிவேன். 5 ஆண்டுக்காலம் தஞ்சை நகராட்சி உறுப்பினராக இருந்து டணியாற்றியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், வெறும் சட்டமன்ற உறுப்பினர் என்ற அந்த அந்தஸ்தை மட்டும் வைத்துக்கொண்டு இருக்காமல், 10 ஆண்டுக்காலம் கூடைப் பந்து விளையாடுகிற இளைஞர்களுக்கு ஊக்கத்தை அளிக்கும் தன்மையில் அந்தச் சங்கத்திற்கு அவர்கள் தலைவராக இருந்து இளைஞர்கள் மத்தியிலேயும், தஞ்சையிலேயும் நல்ல புகழ்பெற்றவராக அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவரே ஒரு நல்ல சிறந்த விளையாட்டு வீரர். அதைபோலவே பூப்பந்து என்று சொல்கிற, பேட்மிட்டனிலே அவர்கள் சிறந்த அக்கறை எடுத்துக்கொண்டு நிறைய விளையாட்டுப் போட்டிகளை அவர்கள் நடந்தி வந்தார்கள் என்பதை இன்றைக்கு நினைவுகூறக் கடமைப்பட்டிக்கிறேன்.

ஆகவே அவர்கள் அரசியல் தொடர்போடு விளையாட்டுத் தொடர்பையும் வைத்துக் கொண்டிருந்ததால் இளைஞர்கள் மத்தியில் அவர்கள் மிகுந்த செல்வாக்கையும் ஆதரவையும் பெற்றிருந்தார்கள். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக ஐந்து ஆண்டுக் காலம் இருந்து அந்தச் சங்கத்தின் மூலமாக சிறந்த தமிழ்த் தொண்டினை அவர்கள் ஆற்றினார்கள். அறுபது ஆண்டுக் காலம் நிறையப் போகிற நேரத்தில் அவர்கள் நம்மையெல்லாம் மாளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்திருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப்போல் அவர்கள் ஒரு பண்பாளர், நல்ல கருத்துக்களை இந்த மாமன்றத்தில் அடிக்கடி எடுத்து வைத்தவர். சென்ற வாரம் கூட இந்த மன்றத்திற்கு வந்துவிட்டுத்தான் போனார். ஆக, இன்றைக்கு இருப்பவர் நாளை இருப்பரோ என்ற அந்த நிலைமைக்கு நம்மை எல்லாம் அவர்கள் மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்

1984 பிப்ரவரி 24] [பேரவைத் தலைவர்]

திருக்கிறார்கள். ஆகவே உங்கள் அனைவரின் இரங்கலோடு என்னுடைய இரங்கலையும் அந்தக் குடும்பத்தாருக்கு இந்த மாமன்றத்தின் மூலம் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரங்கல்தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் அனைத்து உறுப்பினர்களும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதின் மூலம் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த பேரவை உறுப்பினருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவை ஒத்தி வைக்கப் பெறுவதற்குமுன் ஓர் அறிவிப்பு.

## 2. அறிவிப்பு.

### நிதிநிலை அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 202(1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 196(1) ஆகியவற்றின் கீழ் 1984-85 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை, 3-3-1984 ஆம் தேதி, சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. அரசினர் தீர்மானம்.

### பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''பேரவை விதி 25(1)ன் கீழ் பேரவை இன்று ஒத்தி வைக்கப்பெற்று மீண்டும் மார்ச் திங்கள் 3ம் தேதி, சனிக்கிழமை காலை 11.00 மணிக்குக் கூடலாம்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த பேரவை உறுப்பினருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் அலுவல்கள் இன்று இத்துடன் ஒத்திவைக்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 3-3-1984 காலை 11.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 9.28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.